செ.வெ.எண்-44 நாள்-12.02.2020

# அரியலூர் மாவட்டம், வஞ்சினபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 131 பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சத்து 65 ஆயிரத்து 910 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், வஞ்சினபுரம் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நிறைவு நாள் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (12.02.2020) நடைபெற்றது.

இம்முகாமில், வருவாய்த்துறையின் சார்பில் 68 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா, அடமானம், நத்தம் பட்டா மாற்றம், பட்டா மாற்றம், காலிநத்தம் உட்பிரிவு ஆகியவைகளுக்கான ஆணைகளையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின்கீழ் 21 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சத்து 52 ஆயிரம் மதிப்பில் உதவித்தொகைக்கான ஆணைகளையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 25 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்து 56 ஆயிரத்து 250 மதிப்பில் மின்மோட்டாருடன் கூடிய இலவச தையல் இயந்திரங்களும், வேளாண்மைத்துறையின் சார்பில் 10 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்து 59 ஆயிரத்து 860 மதிப்பில் வேளாண் இடுப்பொருட்களும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 1 நபருக்கு ரூ.60 ஆயிரம் மானியத்தில் பவர் டில்லரும், 3 நபர்களுக்கு ரூ.15 ஆயிரம் மதிப்பில் வெண்டை விதைகளும், மாற்றுதிறனாளிகள் நலத்துறையின் சார்பில் 3 நபர்களுக்கு ரூ.22 ஆயிரத்து 800 மதிப்பில் மூன்று சக்கர சைக்கிள்களையும் என ஆகமொத்தம் **131 பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சத்து 65 ஆயிரத்து 910** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்கள்.

**இம்முகாமில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களின் நலனுக்காக அனைத்துத்துறைகளிலும் பல எண்ணற்ற நல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். மக்களைத்தேடி திட்டங்கள் மக்களுக்காக நலத்திட்டங்கள் என்ற சீரிய நோக்கத்துடன் தமிழக அரசால் ஒவ்வொரு மாதமும் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் மக்களை நேரடியாக சென்று சேர்கிறதா எனவும், திட்டங்களை குறித்து மக்கள் தெளிவாக தெரிந்துகொள்ளும் வகையிலும் அலுவலர்கள் செயல்பட வேண்டும். பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு நீண்ட தூரம் பயணம் செய்து மனு அளிப்பதை தவிர்க்க நீங்கள் வசிக்கும் இடத்திற்கே அரசு அலுவலர்கள் வந்து உங்கள் கோரிக்கை மனுக்களை பெற்று நலத்திட்ட உதவிகள் வழங்குவதே இந்த மக்கள் தொடர்பு முகாமின் நோக்கமாகும். இன்று வஞ்சினபுரம் கிராமத்தில் நடைபெறும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

பல்வேறு துறைகள் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உங்களுக்கு எடுத்துரைத்தனர். இதை தெரிந்துகொண்டு நீங்கள் அரசின் திட்டங்களை பெற்று பயனடைய வேண்டும். தங்கள் இருப்பிடத்தை சுகாதாரமாகவும், சுத்தமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் பொதுமக்களாகிய நாம் அடிக்கடி கைகளை சோப்புபோட்டு கழுவி சுத்தமாக இருக்க வேண்டும். கைக்கழுவும் பழக்கத்தை அனைத்து மக்களும் கடைபிடிக்க வேண்டும். தொண்டை வலி, காய்ச்சல் ஏற்பட்டால் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சென்று உடனடியாக சிகிச்சை பெற்றுக்கொள்ளவும். மருத்துவர் சீட்டு இல்லாமல் தானாக முன்வந்து மருந்து மாத்திரைகள் வாங்கி உட்கொள்ள வேண்டாம்.

இப்பகுதியைச் சார்ந்த விவசாயிகள் அனைவரும் உழவன் செயலியை தங்களது கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து, வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறையில் உள்ள திட்டங்கள், மானியங்கள் குறித்து தெரிந்துகொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் பேசினார்கள்.

இம்முகாமில், வேளாண்மைத்துறை, கால்நடைப்பராமரிப்புத்துறை, தோட்டக்கலைத்துறை, சுகாதாரத்துறை, குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், செய்தி மக்கள் தொடர்புத்துறை ஆகிய துறைகளின் சார்பாக பொதுமக்கள் எளிதாக அறிந்துகொள்ளும் வகையில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்ததை பார்வையிட்டனர்.

இம்முகாமில், திட்ட இயக்குநர்கள்கள் சு.சுந்தரராஜன் (ஊரக வளர்ச்சி முகமை), ஜெயராமன் (மகளிர்திட்டம்), ஊராட்சி ஒன்றியத்தலைவர் தேன்மொழிசாமிதுரை, ஒன்றிய வார்டு உறுப்பினர் கலாகுருசாமி, துணை இயக்குநர் (தோட்டக்கலை) அன்புராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) என்.இரவிச்சந்திரன், ஊராட்சி மன்றத்தலைவர் செல்விகுமார், மாவட்ட சமூக நல அலுவலர் அன்புகுளோரியா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் சாவித்திரி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**